இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 229 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – பங்குனி 17 – சனிக்கிழமை 30 மார்ச் 2024 – வெளியூர்★ ★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 229 : Thiruvalluvar Year - 2055 - Panguni 17 - Saturday 30 March 2024 - Dak★★ 12 Pages ₹ 5.00




## நாடாளுமன்றத் தேர்தல்: ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடர் பிரச்சாரம்!

### இன்று - சேலம் - கள்ளக்குறிச்சி வேட்பாளர்களை ஆதரித்து பெத்தநாயக்கன் பாளையத்தில் உரையாற்றுகிறார்!

2024 ஏப்ரல் 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தமிழ்நாடு முழுவதும் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார்.

கழகத் தலைவர் அவர்கள் மேற்கொள்ளும் தேர்தல் பிரச்சாரப் பயண விவரம் வருமாறு :



| தேதி | நாடாளுமன்ற தொகுதி |
|---|---|
| 30.03.2024 (சனிக்கிழமை) | - சேலம், கள்ளக்குறிச்சி |
| 31.03.2024 (ஞாயிற்றுக்கிழமை) | - ஈரோடு நாமக்கல் கரூர் |
| 02.04.2024 (செவ்வாய்க்கிழமை) | - வேலூர், அரக்கோணம் |
| 03.04.2024 (புதன்கிழமை) | - திருவண்ணாமலை ஆரணி |
| 05.04.2024 (வெள்ளிக்கிழமை) | - கடலூர், விழுப்புரம் |
| 06.04.2024 (சனிக்கிழமை) | - சிதம்பரம், மயிலாடுதுறை |
| 07.04.2024 (ஞாயிற்றுக்கிழமை) | - புதுச்சேரி |
| 09.04.2024 (செவ்வாய்க்கிழமை) | - மதுரை, சிவகங்கை |
| 10.04.2024 (புதன்கிழமை) | - தேனி, திண்டுக்கல் |
| 12.04.2024 (வெள்ளிக்கிழமை) | - திருப்பூர், நீலகிரி |
| 13.04.2024 (சனிக்கிழமை) | - கோவை, பொள்ளாச்சி |
| 15.04.2024 (திங்கட்கிழமை) | - திருவள்ளூர் வடசென்னை |
| 16.04.2024 (செவ்வாய்க்கிழமை) | - காஞ்சிபுரம், திருபெரும்புதூர் |
| 17.04.2024 (புதன்கிழமை) | - தென்சென்னை, மத்திய சென்னை |

குறிப்பு : முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

“அண்ணா அறிவாலயம்”
சென்னை18.

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

## டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவாலை

# பதவியில் இருந்து நீக்க உத்தரவிட முடியாது!

### டெல்லி ஐகோர்ட் அதிரடி உத்தரவு !

புதுடெல்லி, மார்ச் 30–

அரவிந்த் கெஜ்ரிவாலை முதல்வர் பதவியில் இருந்து நீக்கக் கோரிய மனுவை டெல்லி ஐகோர்ட் தள்ளுபடி செய்தது. டெல்லி அரசின் புதிய மதுபானக் கொள்கை முறைகேடு விவகாரத்தில் அம்மாநில முதல்வர் கெஜ்ரிவாலை அமலாக்கத்துறை கடந்த 21ம் தேதி கைது செய்தது.




இந்த கைது நடவடிக்கையை எதிர்த்தும், உடனடியாக தன்னை விடுவிக்கக் கோரியும் கெஜ்ரிவால் தரப்பில் டெல்லி உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அமலாக்கத் துறையால் கைது செய்யப்பட்ட விவகாரத்தில் தலையிட டெல்லி உயர் நீதிமன்றம் மறுத்து விட்டது. இதனிடையே நிதிமுறை கேட்டில் குற்றம் சாட்டப்பட்டுள்ளதால் கெஜ்ரிவாலை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என சுர்ஜித் சிங் என்பவர் வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கு நேற்று முன்தினம் டெல்லி உயர் நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதி மன்மோகன் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர் முதலமைச்சர் பதவியில் இருக்கக் கூடாது என்று தடை உள்ளதா என்று மனுதாரரிடம் பொறுப்பு தலைமை நீதிபதி கேள்வி எழுப்பினார்.

இந்த விவகாரத்தில் நீதிமன்றம் எவ்வாறு தலையிட முடியும்? பதவியில் இருந்து நீக்குவது குறித்து துணைநிலை ஆளுநர், குடியரசுத் தலைவர் தான் இதில் முடிவு செய்ய முடியும். டெல்லியில் நிர்வாக பிரச்சனை ஏற்பட்டால் குடியரசுத் தலைவர், ஆளுநர் நடவடிக்கை எடுப்பார்கள். டெல்லியில் குடியரசு தலைவர் ஆட்சியை அமல்படுத்தும்படி நீதிமன்றம் உத்தரவிட முடியாது. முதலமைச்சராக கெஜ்ரிவால் தொடரும் விவகாரத்தில் நீதிமன்றம் தலையிட முடியாது என்று கூறி மனுவை நீதிபதிகள் தள்ளுபடி செய்தனர்.

வாயால் வடை சுடும் மோடி

